முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!! தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்சோதி!!

ஆன்மீகத்தில் அரசியலையும், அரசியலில் ஆன்மீகத்தையும் கரை கண்டவர் முருகப்பெருமான் எதிர்காலம் குறித்த இந்தியா, தமிழகத்தில் இந்த வார நிகழ்வாக எதிர்கால பலன் குறித்த மகான் அகத்தியர் அருளிய வார ஆசி நூல்

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 08 திகதி முதல்
சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 15 திகதி வரை
(25.09.2022 ஞாயிறு முதல் 02.10.2022 ஞாயிறு வரை)

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

1. ஞானத்தலைவனே வேலவா
ஞானதேசிகனுள் சக்தியாகி
தான தருமபலமான முருகனே
தலைவனே உமை போற்றி இனிதே
2. இனிதே இந்தியா தமிழகம் தன்னில்
இந்தவார நிகழ்வாக வருங்கால ஆசி
துணிவுபட சுபகிருது நங்கை திங்கள்
தெரிவிக்க அட்டமதிகதி மேல் மூவை திகதி வரை
3. வரைநடக்கும் நிகழ்வாக ஆசிதனை
வழங்குவேன் அரங்கன் கேட்க
திரைபோல மக்களின் வரியை
தீங்குற சூறையாடி வஞ்சிக்கின்ற
4. வஞ்சிக்கின்ற நிலைமையும் தலைமையும்
வருமுலகில் முடிவு கண்டு மாற்றம்
தஞ்சமென ஞானவான் ஆட்சியாக
தவராஜனின் சேவையை ஏற்றுவரும்
5. வரும் மக்களின் மூலமாக
வையகம் கண்டடையும் காலம்
பெருமைபட சடுதி கனிய இருக்க
பிறருக்கு தீங்கு செய்தே வாழ்கின்ற
6. வாழ்கின்ற பொல்லாதவர்களெல்லாம்
வதைகண்டு முடிய இருக்க
தாழ்வான குணங்களை மாற்றி
தமிழக இந்திய மக்களெல்லாம்
7. மக்களெல்லாம் தரும வழிக்கு வரவே
மண்ணில் பேரிடர் பின்னடைவில்லா
ஆக்கமான இயற்கை பாதுகாப்பும்
அழிவில்லா மீட்புமாகி வளரும்
8. வளரவே ஆளுகின்ற காலமே
வந்த நோக்கம் அறிந்து தெளிந்து
தளரா தருமவழி மக்கள் சேவை
தலைமைகள் யாவும் கண்டால்தான்

9. கண்டால் தான் உலகே வியக்க
கண்ணியமிக்க ஞான ஆட்சியாக
தொண்டு வகையில் சிறந்துமே
தென்னகமும் பாரதமும் வளர்ச்சி

10. வளர்ச்சி நிலை கண்டு தேறும்
வறுமை விலகி வாழ்வாதாரம் தேறி
வளர்ச்சிமிக்க ஞானபூமியாக மாறும்
வழங்கிய அகத்தியன் என் வார ஆசி முற்றே

–சுபம்–

முருகப்பெருமான் துணை

மகான் அகத்திய மகரிஷி அருளிய வார ஆசி நூலின் சாரம்:

சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 08 ம் நாள் 25.09.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம் 15 ம் நாள் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை முடிய உள்ள கால நிகழ்வுகள்:

ஞானத்தலைவனே முருகப்பெருமானே மகாஞான குரு ஆறுமுக அரங்கருக்குள் அருள் சக்தியாக வீற்றிருக்கும் வேலனே தானதரும சக்தியாக விளங்கும் முருகப்பெருமானே, சித்தர்களின் தலைவனே எம்பெருமானே முருகா உமை போற்றி வணங்கி இந்தியா தமிழகத்தில் சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 08ம் நாள் 25.09.2022 ஞாயிற்றுக்கிழமை முதல் புரட்டாசி மாதம்15ம் நாள் 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை வரை நடக்க விருக்கும் நிகழ்வுகளை வார ஆசி நூலாக ஆறுமுக அரங்க மகா தேசிகனார் கேட்க அகத்தியர் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் அகத்திய மகரிஷி.

மக்களின் வரிப்பணத்தை சூறையாடுபவர்கள் தகுதி இழப்பார்கள் ஞானிகளின் ஆசி பெற்றவர்களும் அரங்கமகான் கூறும் தூயசன்மார்க்க நெறி நிற்பவர்களுமாகிய ஞானவான்கள் மக்களை வழி நடத்துகின்ற வருங்காலம் வெகு விரைவில் உருவாக இருக்கின்றதால் உலகமக்களே பிறருக்கு தீங்கு செய்தே வாழ்கின்ற பொல்லாதவர்கள் எல்லாம் குன்றிப்போவார்கள் ஆகவே அவரெல்லாம் தமது தாழ்ந்த குணங்களை எல்லாம் மாற்றி கொண்டு தருமங்களை தாராளமாய் செய்து தர்மத்தின் வழிக்குவந்து தருமநெறிதனை பின்பற்றிவர இந்ததேசத்திலே இயற்கை பேரிடர்கள் வராது இயற்கையும் மக்களுக்கு ஒத்துழைக்கும் பாதிக்கப்பட்ட மக்களும் விரைந்து மீள்வார்கள்.

ஆதலினாலே மக்களின் மீது ஆட்சி புரிகின்றவர்கள் அவர்களது ஆட்சி காலத்திலேயே அவர்கள் வந்த நோக்கத்தை அறிந்து தெளிந்து தருமத்திற்காக வந்துள்ளோம் என்பதையும் உணர்ந்து தருமத்தின் வழி சென்று மக்களுக்கு சேவை செய்திட்டால் இந்த உலகமே வியக்குமாறு மக்கள் தொண்டில் சிறந்து விளங்கும் நாடுகளாக இந்தியா தமிழகம் சிறந்து விளங்கி தேசம் வளர்ச்சியடையும்.

தேசத்தினில் வறுமை விலகி மக்களின் வாழ்வாதாரம் பெருகி இந்த தேசமே அற்புதமான ஞானபூமியாக விளங்கும் எனக்கூறகிறார் மகான் அகத்திய மகரிஷி.

–சுபம்–